# ஞாலகுருவின் படைப்புக்கள்

# மீண்டும் ஒரு பாரதப் போர்

குருதிப் போரே துரோணாச்சாரியாரால் அறிவிக்கப்பட்டது.






இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,

12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞாணாச்சாரியார்,

ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்.

(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரணோடையில் கோயில் கொண்டருளுபவர்)



மெய்யான இந்துமத ஆண்டு 43,73,121 கார்த்திகை மாதம்.

## இந்து இலக்கியக் கழக வெளியீடு

காணிக்கை ரூ.10

# உள்ளுறை

**“மீண்டும் ஒரு பாரதப் போர் - குருதிப் போரே துரோணுச்சாரியாரால் அறிவிக்கப்பட்டது.”**

- 18.10.1986இல் அப்போதைய வடஆற்காடு மாவட்ட வேலூரில் உள்ள திருகுலத்திலும், காட்டுவாடி (காட்பாடி) சுடலைப் பூசையிலும் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் தொடர்பான விளக்கக் கட்டுரை.

## ‘தன்வந்திரி’

இவர் குருகுலத்தாரின் உடல் நலம் பேணிய ‘சித்தர் மருத்துவக் கலைஞர்’. இவர் பதினெண்சித்தர்களில் கருவூராரின் வழிவந்தவர்.

தன்வந்திரி பாரதக் காலத்தில் நாடறிந்த புகழ் பெற்ற அரசாங்கத் தலைமை மருத்துவராக இருந்தார். இவர் அவ்வப்போது தம் வாழ்நாள் முழுவதும் பலருக்கும் அறிவுரை கூறியிருக்கின்றார். அதாவது, பாரதத்துக்குத் தொடர்பான கண்ணன் வாழ்க்கையை மையமாகக் கொண்டு தன் வாழ்நாள் முழுவதும் இன்றைக்கு வாழ்க்கைக் குறிப்பேடு (Diary) எழுதுவது போல் தன்வந்திரி பாரத காலச் செய்திகளை எழுதிக் குவித்துள்ளார். இவற்றை குருபாரம்பரியம் தொகுத்துக் காட்டுகின்றது.

தன்வந்திரி குறைந்தது 300 ஆண்டு காலத்துக்கு மேலாக வாழ்ந்திருக்க வேண்டும். கண்ணனின் தாத்தா பாட்டன் முதலியவர்கள் பற்றிய செய்திகளிலிருந்து பாரதப் போர், பாரதப் போரின் முடிவு, பஞ்ச பாண்டவர்களின் முடிவு.... முதலிய பல செய்திகளை மிகமிகத் தெளிவாகத் தனது குறிப்புக்களில் குறிக்கின்றார்.

ஓம் குருவே துணை.

8.4.1987.

கட்டுரை ஆரம்பம்: 18.10.1986; முடிவு 1.4.1987.

# மீண்டும் ஒரு பாரதப் போர்

## குருதிப் போரே துரோணாச்சாரியாரால் அறிவிக்கப்பட்டது.

இன்றைய இந்துமதத் தந்தை, அருளாட்சி நாயகம், ஞானத் தந்தை, குவலய குருபீடம், அரசயோகி, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், இராசிவட்ட நிறைவுடையார், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரர் அருளாட்சி அமைப்புப் பணியை இதுகாறும் அன்பு வழியில், அமைதி வழியில், சமாதான முறையில், அற வழியில், மென்மைப் போக்கில், நிதானமாகவே நிகழ்த்தி வந்துள்ளார். இதற்கு தாத்தாக்களையும், ஆத்தாக்களையும், அம்மையப்பன்களையும் ஒப்புக் கொண்டு ஒத்துழைக்குமாறு செய்து வந்துள்ளார். இதற்காகவே போர்க்கலைகள் பற்றிய ஏட்டறிவினையோ, பட்டறிவினையோ முழுமையாக வழங்காமல் தேவையான அளவிற்கு மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு மட்டும் வழங்கியுள்ளார்.

இதற்குத் துணையாக இராம இராவணப் போர் பற்றிய பேருண்மைகளையும், பாரதப் போர் பற்றிய பேருண்மைகளையும் தேவையான அளவு மட்டும் தேவையானவர்களுக்குக் கூறி வந்துள்ளார். அதாவது, குருதேவர், தேவகுரு, பதினெண்சித்தர் பீடாதிபதி என்ற நிலையிலிருந்து செயல்பட்டு வந்துள்ளார் ஞாலகுரு சித்தர் கருவூரர். ஆனல் ஆச்சாரியாராக, ஆச்சாரிய பீடமாகச் செயல்படாமல்

ஞானுச்சாரியார் என்ற முறையில் தேவையான கலைகள் மட்டுமே இட்டும் தொட்டும் சுட்டியும் வழங்கி வந்துள்ளார்.

அதாவது, தம்மால் எந்தவிதமான அழிவும் நிகழ்ந்து விடக் கூடாது என்ற கொள்கையிலும், குறிக்கோளிலும்தான் திருவோலக்கத்தையும், நாளோலக்கத்தையும் பூணூல் அணிந்தும்; திருநீறு, குங்குமம், சந்தனம், சாந்து, மஞ்சள் எனும் ஐந்தினையும் அணிந்தும்; தலைப்பாகை அணிந்தும், சன்னிதான மரபுப்படி நான்கு முழம் முதல் நாற்பத்தெட்டு முழம் வரை குருதி வண்ணச் சிவப்புத் துணி உடுத்தியும்; அனைத்து விதமான செயல்களையும் அடியான், அடியாள், அடியார் மூலமாகவே செய்தும் வந்துள்ளார்.

ஆனால், இந்துமத ஆண்டுக் கணக்கின்படி 43,73,087வது ஆண்டான இந்த ஆண்டு அமுத ஆண்டு (அட்சய ஆண்டு) ஐப்பசித் திங்கள் 1-ஆம் தேதி சனிக்கிழமை (ஆங்கிலக் கணக்கின்படி 18.10.86); பாரதப் போரின் குருபீடம், ஆச்சாரிய பீடம், துரோணுச்சாரியார் நேரில் காட்சி கொடுத்து; கடுமையான விவாதங்களை நிகழ்த்தி மீண்டும் ஒரு பாரதப் போர் இமயம் முதல் குமரி வரை நிகழ்ந்தேயாக வேண்டும் என்ற நிலையை உருவாக்கி விட்டார். அதிலும், இந்தக் கலியுகத்தில் அருளாட்சிக்காக நிகழப் போகும் அருட்போரால் குருதி மழை பெய்த நிலையே உருவாக வேண்டும் என்று ஆணித்தரமாக அறிவிப்புச் செய்து விட்டார் துரோணுச்சாரியார். அதாவது குருதி ஆறு ஓட வேண்டும், குருதி ஆங்காங்கே தேக்கங்களாக தேங்க வேண்டும், எங்கும் பிணக் குவியல் மிகுந்து (பதினெட்டு) 18 வகைக் காடுகளையும் மீண்டும் உலகம் அடையாளம் கண்டு கொள்ளும் நிலை உருவாக வேண்டும் என்று ஆச்சாரிய பீடம் என்ற நிலையில் ஆணைகளைப் பிறப்பித்து விட்டார்.

(1) சனிக்கிழமை (ஐப்பசித் திங்கள் 43,73,087ஆவது ஆண்டு) 18.10.86 மாலை 7 மணியளவில் திடீரென்று ஞாலகுரு சித்தர்

கருவூரரின் காட்சியில் துரோணுச்சாரியார் தோன்றினர். இன்றைய வடஆற்காடு மாவட்டம் வேலூரில் உள்ள நகராட்சிப் பயணியர் விடுதியில் (கருமாரியம்மன் கோயில் அருகில் உள்ளது) அறை எண் 1இல் படுத்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்த குருதேவர் துள்ளி எழுந்தார். இரண்டு குதிரைகள் பூட்டப்பட்ட போர்க்கோலத் தேரின் தட்டில் கழுத்து அறுபட்டு குருதி கொப்பளித்து வழிந்து கொண்டிருக்கின்ற நிலையில் துரோணுச்சாரியார் காட்சி கொடுத்தார்.

அவரே வாய் திறந்து; "ஞாணுச்சாரியாரே! அருளாட்சி நாயகமே! குவலய குருபீடமே! அரசயோகியே! அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானமே! இராசிவட்ட நிறைவுடையாரே! பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியே! ஞாலகுருவே! சித்தர் கருவூரரே! பாரதகால ஆச்சாரிய பீடம் வந்திருக்கிறோம், விழிச்சி பெறுங்கள்!! இன்று ஐப்பசியின் துவக்கத்தில் அருட்போரை அறிவியுங்கள். அருட்போருக்குரிய அருட்படைத் தளபதியாக எம்மையே அறிவியுங்கள். உங்களுடைய அடியான், அடியாள், அடியார் அனைவரையுமே ஆங்காங்கு பருவ பூசைகளில், சுடுகாட்டுப் பூசைகளில், ஓம ஓக யாக யக்ஞ வேள்வி பூசைகளில் எமது பீடமாகவே அறிவியுங்கள். அதாவது, அருட்போரை தலைமை தாங்கி நிகழ்த்தப் போகின்ற உங்களுடைய அடியான்கள், அடியாள்கள், அடியார்கள் ஒவ்வொருவருமே தங்களை துரோணுச்சாரிய பீடமாக அறிவித்தே போர்க்கோலம் பூண்டு போர்க்களம் புகட்டும்....." என்று பலமுறை திரும்பத் திரும்பக் கூறினர்.

அவரை மரணக் கோலத்தில் கண்டு கலக்கமுற்றதோடு; அவருடைய வேண்டுகோள் கருத்துக்களால் மிகவும் கலங்கிக் குழம்பிப் போனர் குருதேவர். அவரோடு மிகப் பெரிய வாக்குவாதத்தை இரவு 7 மணியிலிருந்து 9 மணி வரை நிகழ்த்தினர்.

(2) இன்றுள்ள சமசுக்கிருத மொழிக்குரிய வியாச பாரதத்தில் துரோணாச்சாரியாரின் தலை பாஞ்சால நாட்டு இளவரசன் திட்டத்துய்மனால் வெட்டப்பட்டு துண்டாக்கப்பட்டதாகவே (*தலையை அறுத்து எடுத்ததாக*) செய்தி இருக்கின்றது. ஆனால், தன்வந்திரி எழுதிய சித்தர் பாரதம் ஒன்றில்தான்; துரோணாச்சாரியாரின் தலைமுடியை இடது கையில் பிடித்துக் கொண்டு வலது கையில் வாளை எடுத்து துரோணாச்சாரியாரின் கழுத்தைத் திட்டத்துய்மன் அறுத்து எடுத்துக் கொண்டிருக்கும் பொழுது வானுலகத்திலிருந்து வானவர்கள் வந்து திட்டத்துய்மன் கீழே விழும் வண்ணம் குதிரையோடு தேரும் சேர்த்து வானுலகுக்கு தூக்கிச் சென்று விட்டார்கள். அதனால்தான், தேவருலகத்தில் அறுபட்ட கழுத்து மீண்டும் முழுமையாக ஒட்டாமலேயே உயிரோடும் உடலோடும் இயங்கும் அளவிற்கு புண்ணை ஆற்றி அவரை அருவுருவ சித்தி நிலையில் வைத்திருக்கிறார்கள்.

அதனால்தான், அவர் பாரதப் போருக்குப் பிறகு இந்த அருவுருவ நிலையில், அதாவது வெட்டுப்பட்ட கழுத்தோடு தன்னுடைய தேரில் ஏறி, அதே குதிரைகளைப் பூட்டி ஓட்டியபடியே மண்ணுலகுக்கு வந்து பலருக்குக் காட்சி கொடுத்தார். அப்படி அவர் பலருக்கும் காட்சி கொடுத்த போது தன்வந்திரியைத் தவிர வேறு யாரும் அவரைப் புரிந்து விரும்பி ஏற்று அவரோடு பழகவில்லை. இது அவருக்கு மாபெரும் தோல்வியாயிற்று.

பாரதப் போர் முடிந்துதான் துரோணர் விண்ணுலகத்திலிருந்து மண்ணுலகத்திற்குத் திரும்புகிறார். அவர் பலரையும் சென்று காணுகிறார். பாரதப் போரின் முடிவு பற்றி விவாதிக்க முற்படுகிறார். ஆனால், எல்லாம் வல்ல மாயக்கண்ணன் அவர் யாருடனும் உரையாடி பாரதப் போரின் விளைவுகளையும், அதன் பயன்களையும் பாதித்திடாமல் இருப்பதற்காகத் “துரோணாச்சாரியாரின் ஆவி அலைகிறது, யாரும் தொடர்பு கொண்டு விட வேண்டாம்!” என்று எச்சரிக்கை வழங்கினான்.

எனவே, துரோணாச்சாரியாரால் எதுவுமே செய்ய முடியாமல் போய்விட்டது.

அவர் மிகுந்த நம்பிக்கையோடு அருட்சினனை (அர்ச்சுனனை) பார்க்கச் சென்றபோது கூட அவன் முழுமையாக மறுத்து அவர் மனமுடைந்து திரும்பும்படிச் செய்துவிட்டான். அவர் எவ்வளவோ கூறியும் கூட அவன், “என் குரு மீது ஆணை, பேயாகத் திரியும் நீங்கள் என் குருவானால் உடனே மறைந்து விட வேண்டும், அல்லது திரும்பப் போய்விட வேண்டும். விண்ணுலகு சென்ற என் குருதேவர் திரும்பவில்லை. நீ ஒரு மாயப் பேய், உன்னை நான் நம்ப மாட்டேன்; போய்விடு. இல்லாவிட்டால் காண்டீபத்தால் உன்னை அழிப்பேன்” என்று கூறி காண்டீபத்தை வளைத்து அவர் மீது அம்பை எய்தான்.

அது கண்டு ஆத்திரமடைந்த துரோணாச்சாரியார், “கழுத்து அறுபட்ட நிலையிலும் அமரனாகிய உன் குருதேவன் உன்னைப் பார்க்க வந்திருக்கும்போதா இப்படி நடந்து கொள்கிறாய், உன்னுடைய வில்வித்தை அனைத்தும் பாழாகப் போகட்டும். பயனற்றுப் போய்விடட்டும். உன்னுடைய ஆற்றல்கள் அனைத்தும் அகன்று போகட்டும்...” என்று சாபமிட்டார். உடனே அருட்சினன் (அர்ச்சுனன்) கையில் இருந்த காண்டீபம் நழுவி விழுந்தது. அவனுடைய ஆற்றல்கள் அனைத்தும் அகன்று போய் அவன் நடுநடுங்கி கோழையாகி அவர் காலில் விழுந்தான். அவன் எவ்வளவோ மன்றாடி மன்னிப்புக் கேட்டும் அவனுக்குச் சாப மன்னிப்பு கொடுக்கப்பட வில்லை.

இது போலத் துரோணாச்சாரியார் பலருக்கும் சாபம் கொடுத்து பாரதப் போரின் வெற்றிவீரராக பூரிப்போடும், பெருமையோடும், செருக்கோடும் வாழ்ந்த அனைவருக்குமே செருக்கையடக்கினார். அவர் ஏறத்தாழ அனைவரையுமே திட்டத்துய்மன் தன் வாளால் அறுத்த

அவருடைய கழுத்துப் புண்ணைத் தொட்டுப் பார்க்குமாறு செய்து; ‘தான் மாயமல்ல, தான் பேயல்ல, பிசாசல்ல, மாயவடிவமும் அல்ல’ என்பதை உணர்த்த முற்பட்டார். ஆனால், யாருமே அவரை துரோணாச்சாரியார் என்று ஒப்புக் கொள்ளவில்லை.

அதனால்தான் ஏமாற்றமும், எரிச்சலும் அடைந்து விட்ட அவர் ஏறத்தாழ எல்லோரையுமே சபித்து விட்டார். இறுதியில்தான் அவர் பாரதப் போரின் கதாநாயகனான கண்ணதேவனை சென்று சந்தித்தார். அவனும் அவரை எள்ளி நகையாடி அவருடைய சாபத்தைப் பெற்ற பிறகே; துவாபர யுகத்தின் அழிவுக்கு ஆச்சாரிய பீடமான துரோணாச்சாரியார்தான் காரணம் என்ற நிலையை உருவாக்கவே அனைவரும் அவரை ஏற்காமல் சாபம் பெறுமாறு செய்தான்.

அதாவது **குருகுலத்தின் ஆட்சி, குருபீடமான துரோணாச்சாரியார் மானுடராக வாழ்ந்த போது கற்றுக் கொடுத்த போர்க்கலைகளாலும், அமரராகிய பிறகு அவருடைய கோபமிகு சாபங்களாலும்தான் அழிந்தது** என்ற தீராப்பழியை கண்ணதேவன் மிகச் சாதுரியமாகத் திட்டமிட்டு உருவாக்கினான். இதனால் மனமுடைந்த துரோணாச்சாரியார் எப்பாடுபட்டாவது கலியுகத்தில் மீண்டும் குருகுலத்தாரின் ஆட்சியை உருவாக்கியே தீருவது என்று முடிவெடுத்திட்டார். அதனால்தான் அவர் மற்றவர்களைப் போல் வீடுபேறு இன்பம் பெறாமல், மண்ணுக்கும் விண்ணுக்கும் தேரேறித் திரியும் அருவுருவ நிலை வாழ்வையே பெற்றிட்டார். அவருடைய மகனான அசுவத்தாமனையும், இம்மண்ணுலகில் இமயமலையின் மடியிலேயே தங்கியிருக்கச் செய்திட்டார்.

## திட்டத்துய்மனின் வாள்:

துரோணாச்சாரியாரை அவரது தேர்த் தட்டில் ஏறிய திட்டத்துய்மன் தனது இடது கையால் அவரது தலைமுடியைப் பற்றி, வலது கையில் உள்ள போர் வாளால் அவரது கழுத்தை அறுக்க

ஆரம்பித்தான். அப்பொழுது விண்ணுலகிலிருந்து வந்த தேவர்களும் தேவதைகளும் திட்டத்துய்மனை தேர்த் தட்டிலிருந்து கீழே தள்ளி விட்டு அவனிடமிருந்த போர்வாளை எடுத்து துரோணாச்சாரியாரின் மடியில் வைத்து குதிரைகளோடு தேரோடு விண்ணுலகிற்குத் தூக்கிச் சென்றார்கள். ஏனென்றால், திட்டத்துய்மனின் வாள் நஞ்சு தோய்ந்த வாளாகும். தேவருலகில் அந்த வாளில் பூசப்பட்டு இருந்த நஞ்சு கண்டுபிடிக்கப்பட்டு, அதற்கேற்ற மருத்துவம் துரோணாச்சாரியாருக்குச் செய்யப்பட்டது. அது கொடிய நஞ்சு என்பதனால் கழுத்துக் காயம் ஆறியும், ஆறாமலும் இருப்பது போன்ற ஒரு வகையான தேவ மருத்துவமே செய்யப்பட்டது.

எனவேதான், துரோணாச்சாரியாரை கனவிலோ, நினைவிலோ, ஞானக்காட்சியிலோ காணுபவர்களுக்கு அவருடைய கழுத்திலிருக்கும் காயத்திலிருந்து குருதி வடிவது போன்ற காட்சி தெரியும். மேலும் துரோணாச்சாரியாரின் மடியில் நஞ்சு தோய்ந்த திட்டத்துய்மனின் வாள் எப்போதும் காட்சியளிக்கும். அவரும் போர்க்களத் தேரின் மேல்தட்டில் அமராமல் கீழ்த்தட்டில் தவக்கோல நிலையில் அமர்ந்தே காட்சியளிக்கிறார். அவருடைய தேரில் உயர்ந்த வெள்ளைக் குதிரைகள் பூட்டப்பட்டே இருக்கின்றன. அவருடைய தேரில் உள்ள குடையில் சிவலிங்கச் சின்னம் (சிவலிங்க முத்திரை) சிறப்பாகவும், அழகாகவும் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. இந்த முழுமையான காட்சி நிலையே பாரதப் போரின் துரோணாச்சாரியாரின் இறுதி நிலை என்று மிகத் தெளிவாகத் தன்வந்திரி அவர்கள் (சித்தர் கருவூறார் வழி வந்த தன்வந்திரி) தமது '<u>தன்வந்திரி பாரதம்</u>' எனப்படும் **சித்தர் பாரதத்**தில் குறிக்கின்றார்.

இந்தக் குறிப்பின்படியேதான், வடஆற்காடு மாவட்ட வேலூரில் குவலய குருபீடம், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூறார், இந்துமதத் தந்தை, ஞானாச்சாரியார், குருதேவர்

அவர்களுடைய காட்சியில் துரோணாச்சாரியார் தெரிந்தார். மேலும் துரோணாச்சாரியார் திட்டத்துய்மனின் வாளைக் கையிலெடுத்து (உறையிலிருந்து உருவியெடுத்து) உரத்தக் குரலில் கலியுகப் பாரதப் போருக்கு, குருகுல அருளாட்சிக்கு அறிவிப்பும் அறைகூவலும் வழங்கினார். அதனைக் கண்டுதான் அரசயோகி, அருளாட்சி நாயகம், அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், இராசிவட்ட நிறைவுடையார், ஞானபீடம், குருதேவர், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்கள் திகைத்து, உணர்வு வயப்பட்டு, மெய்ம்மறந்து துரோணாச்சாரியாரின் அறிவிப்புக்களையும், அறைகூவல்களையும் அப்படியே ஏற்றுக் கொண்டார். அத்துடன் துரோணாச்சாரியாருக்கு துணையாகவும், இணையாகவும் விருப்புக்கேற்ற வண்ணமாகவும் கலியுக அருட்போரை மனிதக் குருதியை இமயம் முதல் குமரி வரை ஆறாக ஓடவிட்டு இந்திய மண்ணைப் புனிதப்படுத்த ஒப்புக் கொண்டார் குருதேவர்.

ஏனென்றால், இம்மண்ணுலகில் குருபாரம்பரிய மரபுப்படி கலியுகத்தில் உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டை உருவாக்கவும், உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமை கூட்டுறவு சமுதாயத்தை உருவாக்கவுமே அருளாட்சி நாயகமாக தோன்றியிருப்பவர்தான் ஆத்தாள் அமளிகை, கொற்றவை இருக்கை, பராசத்தி திருவடி, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகிய குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்கள் ஆவார். எனவே, அவர் அருட்போரின் அறிவிப்பினை இரவு நடக்க இருக்கும் பருவ பூசையில் (முழுநிலவுப் பூசையில்) உடனே அறிவிக்க முடிவு செய்தார்.

அதற்காக அங்கு வந்த அருள்மிகு திரிபுரமெரித்த அவிர்சடைக் கடவுள் சன்னிதானம் திருகுலக் காப்பாளர் பெ.சுப்பையா B.E. [D.M.(stores) / PATC, 47,பெரிய கழனிக்காட்டுத் தெரு, வேலப்பாடி,

வேலூர் - 632001.] அவர்களிடம் ஆச்சாரிய பீட ஆடைகளை வாங்கி வர ஆணையிட்டார். (8 முழம் இடுப்பில் கட்டிக் கொள்ளும் வேட்டி, சுருட்டி இடுப்புக் கச்சாகக் கட்ட 8 முழம், மேலே போர்த்திக் கொள்ள 8 முழம், தலையில் கட்டிக் கொள்ள 16 முழம் குருதி வண்ணச் சிவப்பில்) இந்தப் புத்தாடைகளை வாங்கிக் கொண்டு வந்து கட்டிக் கொண்டு பருவ பூசைக்குப் புறப்பட்டார் குருதேவர்.

(3) குருதேவர் பருவ பூசைக்கு அறையிலிருந்து ஆச்சாரிய உடையில் எழுந்து புறப்பட்டவுடன் மீண்டும் துரோணாச்சாரியார் நேரில் தோன்றினார். உடனே குருதேவர் அறைக் கதவுகளையெல்லாம் மூடச் சொல்லி விட்டு அதிர்ச்சியால் அயர்ந்து பூசையில் அமர்ந்து விட்டார். சுமார் 1½ மணி நேரம் கழித்தே தன்னிலை பெற்றார். அந்த 1½ மணி நேர நிகழ்ச்சிகளும், காட்சிகளும், உணர்வுப் போராட்டங்களும் எவ்வளவு எடுத்துக் கூறினாலும் எழுதினாலும் தீராதவையே. எனவேதான் இவை பற்றி தனிக்கட்டுரையில் எழுதத் திட்டமிட்டுள்ளார் குருதேவர்.

அதாவது பருவபூசைக்குப் புறப்பட்டு 1½ மணி நேரம் காலதாமதமாகி விட்டதால் அவசரமாக பருவபூசைக்காக திருகுலம் நோக்கிப் புறப்பட்டார். 18.10.1986 சனிக்கிழமை இரவு குருபாரம்பரிய மரபுப்படி ஆச்சாரிய உடை அணிந்து திருநீறு பூசாமல் இரண்டு உருத்திராட்ச மாலைகளை <u>முதன்முதலாக ஒன்றை மூன்று வட்டமாகவும், மற்றொன்றை இரண்டு வட்டமாகவும்</u> அணிந்து **அம்மையப்பராக, சத்திசிவமாக, பஞ்சாட்சரமாக, ஐந்தீ வேட்டல் பயனாக, ஐந்திறமாக, ஐந்திரமாக, ஐந்தரமாக, ஐம்பூதச் செயல்நிலையாக, ஐந்தொழில் வல்லவராக, ஐயீசுவரராக, ...** அருட்போரை அறிவிக்கப் புறப்பட்டார்.

<u>1992-ல்தான் தஞ்சைக் கல்வெட்டின்படி மனுநீதிச் சோழனின் பேரனாகிய குவலய குருபீடம், இந்துமதத் தந்தை, ஞானாச்சாரியார், அரசயோகி, அருளாட்சி நாயகம், அண்டபேரண்ட ஆதிசத்திகள்</u>

சன்னிதானம், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூறார் அவர்கள் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாக இருந்து அருளாட்சி அமைப்பதற்காக அருட்போர் அறிவிக்க வேண்டும். ஆனால், சற்றும் எதிர்பாராமல் இப்படி துரோணாச்சாரியார் நேரில் தோன்றி அருட்போரை அறிவிக்கச் செய்திட்ட காரணத்தினால், **"அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே, அனைத்தும் அம்மையப்பன் திருவிளையாடலே, எதுவும் எம் செயலாவதில்லை......"** என வாய்விட்டே அறிவித்து அருட்போரை துரோணாச்சாரியாரின் விருப்பப்படி குருதிப் போராக அறிவிக்க வண்டியில் (ஆட்டோ ரிக்சாவில்) ஏறித் திருகுலம் புறப்பட்டார்.

**குறிப்பு**:-

ஆட்டோவில் அமர்ந்திருந்தவர்கள்:- குருதேவர், கவிக்குமார் இருவர் மட்டும். இளந்துறவி சுந்தரானந்தன், பிச்சைமணி இருவரும் கடைக்குப் போய் திரும்பாத காரணத்தினால் அவர்கள் இருவரையும் இரவு 7.30 வரை பொறுத்திருந்து பார்த்து விட்டு குருதேவர் குமாருடன் திருகுலம் நோக்கிப் புறப்பட்டு விட்டார். ஆட்டோ திருகுல சுடுகாட்டை நெருங்கும்போது குதிரையின் கனைப்பொலி, யானைகளின் பிளிறல் ஒலி, தாரை, தப்பட்டை, கொம்பு, உடுக்கை, பம்பை, பரப்பை, பறை, முரசு, கிண்ணாரம், கிடுமுட்டி, அதிர்வெடி, சங்கொலி, நாதசுர இன்னிசை, புல்லாங்குழல் ஓசை, யாழிசை, செந்தமிழ் வேத பாராயண ஒலி ..... முதலியவைகள் எல்லாம் கலந்து ஒலித்தன.

குருதேவர் திடுக்கிட்டுப் போய் ஆட்டோவை நிறுத்தச் சொல்லி நாலாபுறமும் பார்த்தார். ஏட்டில் உள்ளபடி "விண்ணும் மண்ணும் இணைய நாற்பத்தெட்டு (48) வழிபடு நிலையினர்களும், நாற்பத்தெட்டு (48) வகைக் கருவறை மூலவர்களும், நாற்பத்தெட்டு (48) வகைச் சித்தர்களும், அமரநிலை பெற்ற பாரத காலப் பெரியவர்களும் தெரிந்தனர். எங்கும் பாரதப் போரின் காட்சி."

குருதேவர் சிறிது நேரம் கண்ணை மூடி மோன ஞான தவ பூசையில் இருந்தார். வேத கணங்கள், நாத கணங்கள், பூத கணங்கள், எண்வகை மூல ஆச்சாரியார்கள், 13 வகைக் கருவழி ஆச்சாரியார்கள், 13 வகைக் குருவழி ஆச்சாரியார்கள், 48 வகை பீடாதிபதி வழி ஆச்சாரியார்கள், 48 வகை அருட்பட்டத்தவர்கள், அங்கொருவரும் இங்கொருவருமாக சில பதினெண்சித்தர் பீடாதிபதிகள், ... என்று பலரும் தெரிய ஆரம்பித்தார்கள். உடன் கண் விழித்துப் பார்த்தார். விழித்த கண்ணிலும், மூடிய கண்ணில் தெரிந்த அனைவரும் தெரிந்தார்கள். எனவே, குருதேவர் மண்ணுக்கும், விண்ணுக்கும் உரிய அனைவரையும் வணங்கி வாழ்த்தினைப் பெற்றுக் கொண்டார்.

அப்பொழுது அங்கு சுடலையில் குழுமியிருந்த இம்மண்ணுலகிற்குரிய கபாலீசுவரர்கள், கபாலீசுவரிகள், திரிசூலர்கள், திரிசூலிகள், பசிய தலைகளை பூண்ட காடுகிழாள்கள், கிழான்கள், நாற்றிசையும் காணும் கொற்றவைகள், கொற்றவர்கள், சுடலை ஈசுவரர்கள், சுடலை ஈசுவரிகள், சுடலை ஆண்டிகள், சுடலை ஆண்டிச்சிகள், சுடலை மோகினிகள், சுடலை மோகன்கள், சுடலை இடாகன்கள், சுடலை இடாகினிகள், சுடலை இயக்கன்கள், சுடலை இயக்கிகள், சுடலை வீரன்கள், சுடலை வீரிகள், சுடலை காத்தான்கள், சுடலை காத்தாயிகள், ... முதலிய அனைவரும் அருளாட்சி நாயகத்திற்கு அருட்போரில் துணை இருப்பதாக வாக்குறுதி அளித்தார்கள். அருளாட்சி நாயகத்தை துணிந்து **குருதி வழி அருட்போரை** அறிவிக்குமாறு ஊக்குவித்தார்கள்.

அதேநேரத்தில் அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானமாகிய குருதேவரை, ‘அறிவிக்கப் போகும் அருட்போருக்கு ஏற்கனவே திருத்தணியில் தேவசேனாதிபதியான முருகப் பெருமான் வள்ளி தெய்வானையோடு மயில் மீது அமர்ந்து அருட்படைத் தளபதியாக பொறுப்பேற்று வெற்றி தேடித் தர உறுதியளித்திருப்பதை மறந்து விட வேண்டாம்’ என்று எச்சரித்தார்கள்.

'அதற்குப் பொருளென்ன?' என்று குருதேவர் கேட்டதற்கு 'விண்ணுலகிலிருந்து அருவுருவ நிலையில் வந்திருக்கக் கூடிய துரோணுச்சாரியாரும், வடஇமயமலையின் மடியில் நீள்தவத்தில் அமர்ந்திருக்கக் கூடிய, உருவநிலையில் வாழும் அவர் மகன் அசுவத்தாமனும் பரவலாக மக்களின் உள்ளங்களிலும், இல்லங்களிலும் உருவ அருவ அருவுருவ நிலைகளில் தத்துவாந்தமாகவும், செயல்சித்தாந்தமாகவும் தோன்றி அருட்போரை வெற்றியாக இறுதிவரை நடத்தித் தர வேண்டுமென்றும்; அருட்போரின் வெற்றிக்குப் பிறகு அருளாட்சி முழுமை பெறவும், உலக ஆன்மநேய ஒருமைப்பாடு வளம் பெறவும், உலக சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் வலிமையாக அமையவும், பதினெண்சித்தர்களின் சீவநெறியான சித்தர் நெறியெனும் இந்துமதம் செழிப்போடு நிலைத்த ஆட்சி பெறவும் மேற்படி துரோணுச்சாரியாரும், அவர் மகன் அசுவத்தாமனும் நிலையாக உதவி செய்ய வேண்டுமென்றும் ... உறுதி மொழி பெற்றிடுங்கள்' என்று அந்தச் சுடுகாட்டில் இருந்தவர்கள் கூறினுர்கள்.

அதன்படியே குருதேவர் சுடுகாட்டுக்குச் சென்று இறங்கி பூசைகளைச் செய்து நிலவு தோன்றுவதற்கு முன்னரே துரோணுச்சாரியாரையும், அசுவத்தாமனையும் வரவழைத்து மேற்படி உறுதிமொழிகளோடு; அவர்களிருவரும் அழைத்த போதெல்லாம் வந்து அனைத்து வகையான உதவிகளையும் வழங்க வேண்டுமென்றும்; குருதேவர் அழைக்காமலேயே இவர்கள் இருவரும் அந்த நொடி முதல் குருதேவருக்கும், குருதேவரின் வழிவழி வாரிசுகளான குருகுலத்தவர்களுக்கும் நிலையான பாதுகாப்பு நல்க வேண்டுமென்றும் உறுதிமொழி பெற்றுக் கொண்டார்.

மேலும், **'குருவிடம் மெய்யான அன்பும், பத்தியும், பணிவும் பூண்டு ஒழுகுபவர்களுக்கும்; குருவாணையின்படி வாழுபவர்களுக்கும்; குருதேவரிடம் பத்தி, சத்தி, சித்தி, முத்திப் பூசைகளைச் செய்து**

**கொண்டவர்களுக்கும்; குருதேவரால் வாரிசுகளாக அறிவிக்கப் பட்டவர்களுக்கும்; குருவுளப்படி பொதுமக்களுக்கு நன்மை செய்பவர்களுக்கும்; குருபாரம்பரிய மரபுப்படி குருவழியாக இல்லற வாழ்வை அருளூற்றுக்கிக் கொள்பவர்களுக்கும்; குருவழியாக அருட்கலைகளில் தேர்ந்து இந்துமதத்தின் வாய்மையையும் தூய்மையையும் வாழ்வியல் கெடாது மெய்யாகவே காப்பவர்களுக்கும்; விண்ணுலகம் வாழ் துரோணாச்சாரியாரும், மண்ணுலகம் வாழ் அசுவத்தாமனும் இப்பிறப்புப் போல எப்பிறப்பும் துணையிருந்து காத்து இன்னருள் புரிய வேண்டும்**' என்ற வாக்குறுதியையும் பெற்றுக் கொண்டார் குருதேவர்.

இதனால் குருபாரம்பரியத்தில் "இராசிவட்ட நிறைவுடையாராக தோன்றும் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி காலத்தில்தான் விண்ணும் மண்ணும் இணைந்து இம்மண்ணுலகுக்கு உட்பட்ட அண்டபேரண்ட அருளாட்சி உருவாகும்" என்று இருக்கின்ற அந்த வாசகத்தின் கருத்து துரோணாச்சாரியாரும், அசுவத்தாமனும் பாரதகாலத்தில் குருகுலத்தின் தலைசிறந்த ஆச்சாரியார்களாக விளங்கிய அதே தெய்வீக நிலையிலிருந்தே வாக்குறுதி வழங்கியதால் மெய்யாயிற்று.

(4) துரோணாச்சாரியாரும், அசுவத்தாமனும் யாகத்தின் போது நிலவொளி யாகத்தில் படுகின்ற நேரத்தில் அருளுலக முறைப்படி நேரில் திருகுல யாகத்தில் எழுந்தருளி தாங்களே முன்னின்று கலியுக பாரதப் போருக்குரிய அறிவிப்புக்களைச் செய்து தலைமைப் பொறுப்பேற்பதாக வாக்குறுதி அளித்து மறைந்தார்கள்.

அப்பொழுதும் கூட குருதேவர்;

(1) நிகழப் போவது அரசியல் போராக மட்டும் இருந்து விடக் கூடாது.

(2) நிகழப் போவது மதங்களுக்கிடையே நிகழும் மதப் போராக மட்டும் இருந்து விடக் கூடாது.

(3) மக்கள் சமுதாயத்திடையே ஏற்பட்டிருக்கும் பொருளாசையின் காரணமாக வளர்ந்து விட்டிருக்கக் கூடிய பொருளாதாரப் பொறுமைப் போட்டிப் போராக இருந்து விடக் கூடாது.

(4) குறிப்பிட்ட தனிமனிதர்களிடம் குவிந்திருக்கக் கூடிய அனைத்து வகையான வசதி வாய்ப்புக்களின் காரணமாக விளைந்துள்ள அதிகார வெறிப் போராட்டப் போராக இருந்து விடக் கூடாது.

(5) எந்த விதமான அப்பழுக்கும், குற்றங்குறையும் இல்லாத, கள்ளங்கபடமற்ற அப்பாவி மக்களுக்கு இப்போரினால் தொல்லையே விளையக் கூடாது. பாதிப்பு வரக் கூடாது.

(6) அருளாளர்களின் பெயராலும், அருளூற்றுக்களான ஆலயங்களின் பெயராலும், காலப்போக்கில் உருவாகி விட்ட மதங்களுக்கும், சாதிகளுக்கும் இடையில் எந்தவிதமான பூசலோ, போராட்டமோ, போரோ நிகழவே கூடாது, கூடாது, கூடாது. அதாவது, இந்தப் போரினால் எந்த மதத்துக்குமோ அல்லது சாதிக்குமோ அல்லது ஆலயத்துக்குமோ அல்லது பத்தர் கூட்டத்துக்குமோ அல்லது அருளாளர்களின் சாதனைகளுக்கோ, போதனைகளுக்கோ எந்த வகையான பாதிப்பும் ஏற்படக் கூடாது, ஏற்படக் கூடாது, ஏற்படக் கூடாது, ஏற்படவே கூடாது.

(7) உலகம் தழுவிய மக்கள் வாழ்வில் அன்பு, அமைதி, அருள், இனிமை, இறைமை, உண்மை, பற்று, பாசம், தோழமை, நட்பு, கடமை, நேர்மை, பணிவு, கனிவு, ... முதலிய நல்ல பண்புகள் முறையோடும், நெறியோடும் ஊற்றெடுத்து ஆற்றுப் பெருக்காய் ஓடி மனித வாழ்வின் பயன்கள் அனைத்தும் பசுமையாக தழைத்துச் செழித்து வளர்ந்திட இக்கலியுகப் பாரதப் போர் உதவிட வேண்டும், உதவிட வேண்டும், உதவிட வேண்டும், உதவியேயாக வேண்டும், ...

என்று **ஏழு வகையான அறக்கட்டளைகளை அருட்போருக்குரியனவாக வழங்கினர்**.

இந்த **அருட்போரின் அறக்கட்டளைகள் ஏழும்** குருபாரம்பரியத்தில் பொதுவாக அருட்போர் பற்றிய தத்துவ விளக்கமாகக் காணப்படுகின்றன என்ற கருத்தை குருதேவர் யாகத்தின் போதும், அதன் பிறகும் அனைவருக்கும் அறிவித்தார். ஏனென்றால் அருட்போரின் அறிவிப்பின் போது யார்யார் இருக்கக் கூடாது என்று அல்லது யார்யார் இருக்கத் தேவையில்லை என்று துரோணாச்சாரியாரே கூறி விட்ட காரணத்தினால் குருதேவர் யாகத்தின் போதும், அதற்குப் பிறகும் **அருட்போர் அறிவிப்பு நிகழ்ச்சி** பற்றியும், அது தொடர்பான முன்பின் நிகழ்ச்சிகளும், தத்துவ பின்னணிகளும், அருளுலகக் கட்டளைகளும், குருதேவரே எடுத்த உலகியல் முடிவுகளும், தாத்தாக்களும் ஆத்தாக்களும் நிகழ்த்திய திருவிளையாடல்களும், ... என்று பல செய்திகளை தனித்தனியாகப் பகுத்தும், வகுத்தும், பிரித்தும் தலைப்பிட்டும் எடுத்து விளக்கிட வேண்டிய இன்றியமையாத இக்கட்டான கட்டத்தில் இருந்து வருகிறார் நமது குருதேவர். காலப்போக்கில் மேற்படி தலைப்புக்களில் செய்திக் குறிப்புகளும், நிகழ்ச்சி விளக்கக் கட்டுரைகளும், நூல்களும் வசதி வாய்ப்புக்களுக்கேற்ப எழுதி வெளியிடப்படும் நம் குருதேவரால்.

எனவே, 1992 முதல் 1996 வரை நிகழப் போகும் அருட்போர் பற்றிய அறிவிப்பினை இப்போது இந்துமத ஆண்டுக் கணக்கின்படி 43,73,087வது ஆண்டான அமுத ஆண்டு (அட்சய ஆண்டு) ஐப்பசித் திங்கள் 1ஆம் தேதி (18.10.1986) சனிக்கிழமையான இன்று எதிர்பாராமல் துவாபர யுகத்தில் குருகுல ஆச்சாரிய பீடங்களுள் ஒருவரான துரோணாச்சாரியார் நேரில் தோன்றி வேண்டிக் கொண்டதின் காரணமாக குவலய குருபீடமும், இந்துமதத் தந்தையும், அருளாட்சி நாயகமும், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியும் ஆகிய நமது குருதேவர் அண்டபேரண்டங்கள் அனைத்துக்கும் ஞானாச்சாரியாராக, தமிழின ஆச்சாரியாராக, இந்துமத ஆச்சாறியாராக

இருக்கின்ற காரணத்திஞல் உடனடியாக குருகுலத்தார் நிகழ்த்தும் அருட்போரை நிகழ்த்திட்டார்.

அதாவது 1992-இல் அறிவிக்க வேண்டியதை ஆறு ஆண்டுகளுக்கு முன்பே 1986இல் குருகுல ஆச்சாரிய பீடமாகிய துரோணுச்சாரியார் அறிவித்து விட்டார். ஏனெனில், நமது **மெய்யான இந்துமத**த்தின் தத்துவம் <u>முன்னேர்களை மதித்தலும், மூத்தோர்களைப் பேணலு</u>மேயாகும். இந்த நிகழ்ச்சி முற்றிலும் எதிர்பாராத நிகழ்ச்சியாஞலும் **அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே! என் செயலாவது ஏதுமில்லை! எல்லாம் அம்மையப்பன் திருவிளையாடலே!** என்ற தத்துவ வாசகங்களையே சொல்லிலும் செயலிலும் முழுமையாக செயலாக்கி வாழுபவர் நமது குருதேவர். எனவேதான், துரோணுச்சாரியாரின் வேண்டுகோளை உடனே ஏற்று செயலாக்கிஞர்.

ஏற்கனவே நமது குருதேவரின் வாழ்நாளில் 6.10.1936 - 10.10.1936 என்று இரண்டு தோற்றுவாய் நாட்கள் போற்றுதலுக்குரியனவாய் இருக்கின்றன. இந்த அருட்போர் அறிவிப்பின் மூலம் 18.10.1986 என்ற நாளும் ஒரு தோற்றுவாய் நாளாக, அதாவது **ஆச்சாரிய பீட தோற்றுவாய் நாளாக** போற்றுதற்குரிய பெருமை பெறுகின்றது.

(5) திருகுலத்தில் நடக்கும் பருவபூசைகளில் இந்த பருவபூசை வரலாற்று முதன்மையும், சிறப்பும் பெறுகின்றது. ஏனெனில் <u>துவாபர யுகத்து குருகுலத்தின் அழிவுக்காக நிகழ்ந்த பாரதப் போர்</u>; இந்த கலியுகத்தில்தான் <u>குருகுலத்தின் செழிப்புக்கும், நிலையான வாழ்வுக்கும், உலக மக்களின் நல்வாழ்வுக்கும் பயன்படக் கூடிய பாரதப் போராக</u> மாற்றித் திருத்திப் புதுப்பித்து புரட்சிகரமாக உருவாக்கப்படும் பணி இத்திருகுலத்தில் துவங்கிடும் பொன்னுன வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. அதுவும் 1992இல் அருளாட்சிக்காக துவங்கும் அருட்போர் குருகுல பாரதப் போரின் ஆச்சாரிய பீடமான துரோணுச்சாரியாராலேயே

மீண்டும் துவக்கப்படப் போகிறது அல்லது தயாரிக்கப்படப் போகிறது என்பது போற்றுதற்குரியதாகும். மேலும் இந்தப் பருவபூசையில் குருகுலத்துக்குச் சம்பந்தம் இல்லாத பொதுமனிதர்கள் பலரும் ஆச்சாரிய பீடமாக அறிவிக்கப்பட்டனர்.

(6) இப்பூசை பற்றி தலைமைப் பொறுப்பாளர் அருள்மிகு அங்காள பரமேசுவரி சன்னிதானம் சி.கவிக்குமார் அவர்கள் சுற்றுப்பயணக் குறிப்பேட்டில் குறித்துள்ள செய்திகள்:-

மெய்யான இந்துமத ஆண்டு அமுத ஆண்டு (அட்சய ஆண்டு) ஐப்பசி மாதம் 1ஆம் தேதி சனிக்கிழமை 18.10.86 மாலை 7 மணிக்கு துரோணாச்சாரியார் வருகை. குருதேவர் ஆச்சாரியாராக மேலே துணி போட்டு திருகுலம் வந்திருக்கிறார். பூசை நிகழ்ந்த பின் இரவு 9 மணிக்கு மேல் துரோணர் வருகையை அறிவித்தார். இரவு 10 to 10¼ திருகுலத்தில் கொடியேற்றி துரோணரை அருட்படைத் தளபதியாக அறிவித்துப் போர் முழக்கம் செய்தார் குருதேவர்.

<u>**குறிப்பு**</u>:- அப்போது அங்கு இருந்தவர்கள் குருதேவருடன், (1) தலைமைப் பொறுப்பாளர் சி.கவிக்குமார், (2) இளந்துறவி சுந்தரானந்தன், (3) திருகுலப் பொறுப்பாளர் திரிபுரமெரித்த அவிர்சடைக் கடவுள் சன்னிதானம் சித்தரடியார் பெ.சுப்பையா, (4) சித்தரடியான் தேவராசு நாயுடு, (5) இராமலிங்கம், (6) ஸ்ரீராமுலு, (7) சித்தரடியார் குருசாமி, (8) தாயுமானவர் சன்னிதானம் சு.இராசு நாயுடு, (9) தாயுமானவர் சன்னிதானம் M.C.இராமன், (10) அகத்தியர் சன்னிதானம் மு.இராமானுசதாசு, (11) கஞ்சமலை காளாங்கிநாதர் சன்னிதானம் இல.க.கணேசன், (12) குலவிளக்கம்மன் சன்னிதானம் T.பொன்னுசாமி, (13) மரப்பறை அங்காள பரமேசுவரி சன்னிதானம் இர.கங்காதரக்குமார், (14) கபாலீசுவரி சன்னிதானம் சீ.மணி, (15) ஏகலைவன் சன்னிதானம் கு.இராசமாணிக்கம், (16) தஞ்சைப் பெருவுடையார் சன்னிதானம் சோ.இரவீந்திரன் ஆகியோர்.

கொடியை குருதேவர் ஏற்றிக் கொண்டிருக்க கொடிநிலை வணக்கம், போற்றி வாசகம் கூறப்பட்டன. பின்னர் கொடியேற்றி குருதேவரே முழக்க வாசகங்களைக் கூற ஆரம்பித்தார்.

“அரகர நமப் பார்வதி பதயே, அரகர மகாதேவா!
தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!
மண்ணவர்களே போற்றி! விண்ணவர்களே போற்றி!
வானவர்களே போற்றி! ஆகாயத்தவர்களே போற்றி!
பிண்டத்தவர்களே போற்றி! அண்டத்தவர்களே போற்றி!
பேரண்டத்தவர்களே போற்றி! அண்டபேரண்டத்தவர்களே போற்றி!
ஈசுவரியே போற்றி! கொற்றவையே போற்றி!
கபாலீசுவரியே போற்றி! காளியே போற்றி! மாரியே போற்றி!
பாரதப் போரில் நிகழ்ந்தது போல் குருதி நீர் பொழியட்டும், இரத்த நீர் ஓடட்டும், குருதித் தேக்கம் உருவாகட்டும். இமயம் முதல் குமரி வரை மீண்டும் பாரதப் போர் நிகழட்டும். திருத்தணி மலையில் அமர்ந்துள்ள முருகன் மயில் மேலே வள்ளி தெய்வானை நாச்சியாரோடு அருளாட்சிப் போர் நிகழ்த்த அருட்படைத் தலைவனாக உறுதி தரப்பட்டது, உத்தரவு தரப்பட்டது. துரோணாச்சாரியார் அருட்படைத் தளபதியாக அறிவிக்கப்படுகிறார். குருகுலப் போர் மீண்டும் நிகழ்த்தப்படுகிறது. இம்முறை உமக்குத் தோல்வியில்லை. பாரதப் போர்த் தலைவனே பீடாதிபதியாக வந்துள்ளார். இங்கு வந்துள்ள அனைவருமே ஆச்சாரிய பீடமாக அறிவிக்கப்படுகிறார்கள். மீண்டும் பாரதப் போர் நடந்தே தீரும். இரத்த ஆறு ஓடியே தீரும். இமயம் முதல் குமரி வரை இரத்த ஆறு ஓடியே தீரும்.”
இப்பொழுது கொடியேற்றி;
“அசுவத்தாமா! பனிமலையில் இனி உனக்கு வேலை இல்லை, பனிமலையில் இனி உனக்கு வேலை இல்லை, பனிமலையில்

இனி உனக்கு வேலை இல்லை. இமயம் முதல் குமரி வரை கௌரவப் போர் நிகழ்ந்தே தீரும். இம்முறை நிகழப் போகும் போரில் இணைத் தளபதியாக, துணைத் தளபதியாக நியமிக்கப் படுகிறாய்.

இனி இயற்கையே! உனது சீற்றங்கள் தடுக்கப்பட மாட்டா. நிலநடுக்கம் ஏற்பட்டாலும், மண்மாரி பெய்தாலும் ... தடுக்கப்பட மாட்டாது. அநீதிகள் அழியட்டும். நீதி நிலைக்கட்டும். அருளாட்சி அமையட்டும். சித்தர் நெறி தழைக்கட்டும். பாரதப் போரில் இருந்தது போல் அல்லாமல் இம்முறை கண்ணன் உங்கள் பக்கம் துணையாக இருக்கிறான். போர் அறிவிக்கப்படுகிறது. இன்று முதல் போருக்கான ஆயத்தங்கள் செய்யப்படட்டும். அணிவகுப்புகள் நிகழட்டும். வியூகங்கள் வகுக்கப்படட்டும். வீரர்கள் தயாராகட்டும்.”

இப்படியாக அறிவித்ததும் பூசையை வீரத்துடன் முடித்தார் குருதேவர். இதன்பிறகு அசுவத்தாமனும் நேரில் தோன்றி அருட்படையின் இணைத் தளபதியாக அருளாட்சி நாயகத்தின் முன்னிலையில் பொறுப்பேற்றார்.

(7) இப்படி குருகுலத்தின் துவாபர யுக ஆச்சாரிய பீடங்களில் சிறப்புக்குரிய துரோணாச்சாரியாரும், அவர் மகன் அசுவத்தாமனும் கலியுகத்தில் அருளாட்சி நாயகம் நிகழ்த்தவிருக்கும் அருட்போருக்குத் தாங்களாகவே திடீரென்று நேரில் வந்து தளபதி பொறுப்பையும், இணைத்தளபதி பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார்கள். இதனை சந்திர குலத்துத் தோன்றலாகவும், சூரிய குலத்துத் தோன்றலாகவும் (கருவூரார் மகள் வயிற்றுப் பேரனாகவும், காகபுசுண்டரின் மகன் வயிற்றுப் பேரனாகவும் பிறந்திருப்பவரே நமது குருதேவர்) தோன்றியிருக்கக் கூடிய பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி நமது குருதேவர் அருட்போருக்கு முழுத் தலைமை பூண்டு ஆரம்பம்

முதல் இறுதி வரை தேவி தெய்வானை நாச்சியாருடனும், தேவி வள்ளி நாச்சியாருடனும் மயில் மீது அமர்ந்து அருட்போரை முழுமையாக நிகழ்த்தித் தர ஒப்புக் கொண்டிருந்த தேவசேனாதிபதியான முப்பத்தாறு ஆண்டுப் பிரயத்தையுடைய திருத்தணிகை மலை முருகப் பெருமானை வரவழைத்து உறுதி செய்து கொண்டார்.

அதன்பிறகு நமது குருதேவர் திருகுலப் பூசைகள் அனைத்தையும் நிறைவு செய்து துரோணாச்சாரியார், அசுவத்தாமன் இருவரையும் வேலூர் காட்டுவாடி பாலாற்றங்கரைச் சுடலைக்கு எழுந்தருளுமாறு கேட்டுக் கொண்டார். திருத்தணிகை மலை முருகனை நள்ளிரவு சுடலைப் பூசையில் கலந்து கொள்வோர் சிலருக்காவது ஊனக் கண்ணிலும், பலருக்கு ஞானக் கண்ணிலும் அருட்போர் நடக்கும் போது எப்படி தேவியர் இருவரோடு மயில் மீது அமர்ந்து தோன்றுவானோ அப்படி காட்சி தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இது பற்றி அனைவருக்கும் அறிவித்தார். எனவே, எப்படியும் இருபது முப்பது பேராவது கட்டாயம் நள்ளிரவில் பாலாற்றங்கரைச் சுடலைக்கு வருவார்கள் என்று எதிர்பார்த்தார் குருதேவர்.

(8) குருதேவர் இரவு 10½ மணிக்கு சேர்வை முனுசாமி பிள்ளை தெருவில் (வீட்டு எண் 11இல்) இருக்கும் சோலையழகன் வீட்டிற்கு வந்தார். சமைக்கப்பட்ட பலி பொருளை அனைவரோடும் உண்டார். பிறகு பாலாற்றங்கரைச் சுடலையில் பூசை செய்யப் புறப்பட்டார். வழியில் (Travellers' Bungalow) பயணியர் விடுதி சென்று மாற்று உடையணிந்து சுடலைக்குரிய சிவக் கோலத்தில் சுடலைக்குச் சென்றார்.

சுடலைப் பூசை நள்ளிரவு 12:45 மணிக்கு மேலுமாயிற்று. குருதேவரின் வேண்டுகோளின்படி துரோணாச்சாரியார், அசுவத்தாமன் எழுந்தருளினார்கள். திருத்தணிகை முருகன் இரு மனைவியரோடு மயில் மீது அமர்ந்து

வந்து சுடுகாட்டில் கபாலி ஈசுவரி, சுடலை ஈசுவரி, சுடலை ஆண்டிச்சி முதலியவர்களுக்கு ஊன்றியிருந்த திரிசூலத்திற்கு நேராக வானிலிருந்து அருள் வழங்கினார். அது கண்டு குருதேவர் வந்திருந்தவர்களை ஒன்று இரண்டு என்று வரிசை எண் கூறி அவரவர்களின் பெயரைக் கூறச் சொன்னார். வந்திருந்த 36 பேருக்கு முருகப் பெருமானும், வள்ளி நாச்சியாரும், தெய்வானை நாச்சியாரும் அருள் வழங்கினார்கள். ஆனால், வந்திருந்தவர்களில் எத்தனை பேர்கள் அருட்பயனை துய்த்தார்களோ தெரியவில்லை. அது கண்டு குருதேவர் வாய்விட்டுக் கலகலவென்று சிரித்தார். பின் தன்னைத்தானே சமாதானப் படுத்திக் கொண்டார்.

(9) குருதேவர் அனைவரிடமும், “நீங்கள் உங்களின் நம்பிக்கைக்கும், உண்மைக்கும், குருபத்திக்கும், பயிற்சிக்கும், முயற்சிக்கும், பரிபக்குவங்களுக்கும் ஏற்பத்தான் இங்கிருந்து அருளைப் பெற்றுச் செல்ல முடியும். எனவே என்னையும், திரிசூலத்தையும், புளியமரத்தையும், எரிந்து சாம்பலாயிருக்கும் பிணத்தையும் சேர்த்து 9 முறை சுற்றி வாருங்கள். அவரவரின் பெயரையும், சுற்றி வருவதில் உங்கள் வரிசை எண்ணையும் கூறுங்கள்” என்று ஆணையிட்டார். அதன்படி 36 பேர்கள் அந்த சுடலைப் பூசையில் கலந்து கொண்டார்கள் என்பதும் தெரிய வந்தது.

துவாபர யுகத்தில் பாரதப் போர் 18 நாட்கள் நிகழ்ந்தது. இந்த பதினெட்டு என்ற எண்ணிக்கையின் இரு மடங்குக்குரிய 36 என்ற எண்ணிக்கைக்குரிய 36 ஆண்டுகள் பாரதப் போரின் தலைவனும், கீதையின் நாயகனுமாகிய கண்ணதேவன் பாரதப் போருக்குப் பின் வாழ்ந்த காலமாகும். இதனை வியாசர் முதல் பாரதம் பாடிய அனைவரும் மிகத் தெளிவாகக் குறிக்கின்றார்கள். இதனைத்தான் சித்தர் பாரதம், அதாவது தன்வந்திரி பாரதம் ‘பாரதப் போர்

முடிந்த பிறகு கண்ணதேவன் 36 ஆண்டுகள் துவாரகையில் வாழ்ந்திருந்தான்' என்று குறிக்கின்றது.

அதாவது, கீதையின் நாயகனுன கண்ணதேவன் தனது 84 வயதில் பாரதப் போர் முடித்த பிறகு சுமார் 27,000 பெண்களுக்கு மேல் {*நாகாசுரன் பட்டணத்திலிருந்து கொணர்ந்த 16,000 பெண்களேயும், முராசுரனின் 10 பெண்களேயும், பகதத்தன் பட்டணத்திலிருந்து கொணர்ந்த 11,600 பெண்களேயும், இராதை, உருக்குமணி, சாம்பவதி, சத்தியபாமா, கானந்தி, மித்திரவிந்தை, சத்தியவதி, பத்திரை, இலக்குமணே, நப்பின்னே எனும் பத்து பெண்களேயும் ஆக மொத்தம் (16,000 + 00010 + 11600 + 00010 =) 27620 பெண்களேயும்*} திருமணம் செய்து கொண்டு தாந்தரீக பூசைகளேச் செய்து தாந்தரீக வல்லியாக, தாந்தரீகச் சித்தியாளனுக வாழ்ந்தான்.

அப்பொழுது பதினெண்சித்தர்களின் தாய்மொழியான அண்ட பேரண்டமாளும் மாரு இளமையும், பசிய வளமையும் உடைய அமுதச் செந்தமிழ் மொழியான கற்றவர் மகிழும் நற்றமிழ் மொழியில் கதைகளேயும், காதைகளேயும், கவிதைகளேயும், கீதைகளேயும் எண்ணற்று எழுதிக் குவித்தார். அவை 27 வண்ணங்களாக தமிழ் மொழியில் என்றென்றும் சான்ருேர்களின் எண்ணங்களே விளக்குவனவாக வாழும் தகைமையனவாயின. இம்மாபெரும் பணி கண்ணதேவனுல் அமுதத் தமிழ் மொழிக்கு அழகூட்டிட 36 ஆண்டுக்காலம் நிகழ்ந்திட்டது என்பதால்; இப்பொழுது கலியுகத்தில் மீண்டும் பாரதப் போர் நமது குருதேவர், குவலய குருபீடம், இந்துமதத் தந்தை, இராசிவட்ட நிறைவுடையார், அரசயோகி, அருளாட்சி நாயகம், அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், ஆச்சாரியார், ஆச்சாரிய பீடம், தமிழின ஆச்சாரியார், இந்துமத ஆச்சாறியார், ஞானுச்சாரியார், ஞானபீடம், ஞானவேந்து, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார், நிறையக்ஞர்,

கருவறை மூலவர்களின் அம்மையப்பர் அவர்களால் அறிவிக்கப்பட்டவுடன் அதற்காக நிகழுகின்ற போரின் முதல் நாள் பூசையில் 36 பேர்கள் கலந்து கொண்டது குறிப்பிடத் தக்க சிறப்பாகும். அதாவது 36 என்ற எண் மிகமிகச் சிறந்த வரலாற்றுப் புகழையும், இலக்கியப் புகழையும், அருளுலகப் புகழையும் பெறுகின்றது.

(10) துவாபர யுகப் பாரதப் போரின் துவக்கத்தில் கண்ணதேவன் சந்திரனையும் சூரியனையும் ஒருசேர வரவழைத்து அமாவாசை தருப்பைப் புல் பூசையினைச் செய்தான். அதனால் மாபெரும் குழப்பங்கள் நிகழ்ந்தன. அரவானைப் பலியிட்டுப் பாரதப் போர் துவக்கப்பட்டு ஏறத்தாழ அரச குடும்பத்தில் எவருமே மிஞ்சாத அளவுக்கு [*அபிமன்யுவின் மனைவி கருவுற்றிருந்த காரணத்தினால் அவளைப் பாதுகாக்க அருட்சினன் மனைவி நாட்டில் மிஞ்சினாள். பாரதப் போரில் மிஞ்சிய ஒரே ஒரு வீரன் காவலுக்காக விடப்பட்டான். யாதவ குலத்தில் மிஞ்சிய ஒருவன் இம்மூவருக்கும் துணையானான். ஆகப் பாரதப் போரின் முடிவில் பஞ்ச பாண்டவர்கள் வனவாசம் புறப்படுவதற்கு முன்னால் இந்த நாலு பேரை வைத்துத்தான் உலகியலை உருவாக்கிச் சென்றார்கள். அதனால்தான் உலக வழக்கில் "எதற்கும் நாலு பேர் வேண்டும்", "எதையும் நாலு பேர் வைத்துச் செய்ய வேண்டும்", "எதைச் செய்வதானாலும் குறைந்தது நாலு பேர் வேண்டும்" ..... என்பன போன்ற மூதுரைகள் தோன்றின.*] மிகப் பெரிய கொடிய பாரதப் போர் நிகழ்ந்து முடிந்தது.

இக் கலியுகத்திலோ கண்ணதேவன் சந்திரகுலத்தின் பதிலியாகவும் (தாய் வழியில்), சூரிய குலத்தின் பதிலியாகவும் (தந்தை வழியில்) பிறப்பெடுத்திருப்பதால் அவர் இருக்கும் இடத்தில் சூரியனும் சந்திரனும் ஒருவரையொருவர் சந்தித்துக் கொண்டே இருக்கிறார்கள், இணைந்திருக்கிறார்கள் என்றே பொருள். அதாவது அவர் எதைச் செய்தாலும் அமாவாசை நாளில் செய்வதாகவே ஆகிறது. எனவே,

உறுதியாக கலியுகத்தில் நிகழும் அருட்போர் மூலம் அருளாட்சி அமைந்தே தீரும்.

**அந்த அருளாட்சியின் மூலம் உலக ஒற்றுமை, உலக அமைதி, உலக நிறைவு, உலகச் சமாதானம், உலகச் சகோதரத் தத்துவம், உலகக் கூட்டுறவு, உலகப் பொதுவுடமை, சாதிமத வேற்றுமையற்ற சமுதாயம், பொருளாதார ஏற்றத் தாழ்வற்ற சமுதாயம், சுரண்டலும் ஒடுக்குமுறையும் இல்லாத சமுதாயம், சர்வாதிகாரமும் அடிமைப்படுத்தலும் இல்லாத சமுதாயம், தனிமனித ஆதிக்கமோ இன ஆதிக்கமோ இல்லாத சமுதாயம், எல்லாப் பண்பாடும் பிழைத்துத் தழைத்தெழ சம வாய்ப்பு அளிக்கும் சமுதாயம், பொருட் பேராசை வெறியாட்டம் ஆடாத சமுதாயம், விரும்பியவர் விரும்பியன கற்று விரும்பியன நோற்று விரும்பியன பெற்று உற்றார் உறவினருடன் இனிதே மகிழ்ந்திருக்கும் உரிமையும் வசதி வாய்ப்புகளும் மிகுந்த சமுதாயம், வறுமையும் பசியும் இல்லாத சமுதாயம், நோய் நொடியும் நோவும் பிணியும் இல்லாத சமுதாயம், காசாசை கொண்டு அனைத்தையும் விலைக்கு விற்று வாழும் மானங்கெட்டநிலை இல்லாத சமுதாயம், பணிவும் துணிவும் கனிவும் ஊற்றெடுக்கும் நெஞ்சத்தினர் வாழும் சமுதாயம், எங்கும் எதிலும் உண்மையும் நேர்மையும் நன்மையுமே ஆட்சி செய்யும் சமுதாயம் என்ற புகழுக்குரிய பதினெண்சித்தர் சீவநெறிக்குரிய இந்துமதச் சமுதாயம் அருளாட்சியின் மூலம் உலகெங்கும் நிறுவப்படும்.**

அதாவது, நமது குருதேவர்தான் மிகத் தெளிவாக ‘பதினெண்சித்தர்கள் கூறும் இந்துமதம் என்பது ஒரு சமூக விஞ்ஞானமே’ (The Induism of Pathinensiddhars is only a Social Science); ‘பதினெண்சித்தர்கள் கூறும் இந்துமதம் என்பது ஒரு வாழ்வியல் நெறியே’ (The Induism of Pathinensiddhars is only a life principle); ‘பதினெண்சித்தர்கள் கூறும் இந்துமதம்

மனிதர்கள் மனிதர்களாக வாழத் தேவையானவற்றை போதிக்கவும், கற்றுக் கொடுக்கவும் செய்கிறது’ (The Induism of Pathinensiddhars is only preaching and teaching manliness and it only cultivates the good and noble conduct and character); ‘பதினெண்சித்தர்களின் இந்துமதம்தான் தனிமனிதர்களுக்கு வழிகாட்டவும், சமுதாயத்திற்கு தலைமை தாங்கவும் செய்கிறது’ (The Induism of Pathinensiddhars alone guides the individuals and leads the Society), ... என்று மிகத் தெளிவாக விளக்கங்களை வழங்குகிறார்.

எனவே, இவர் அருளாட்சி நாயகமாக இருந்து 18.10.1986இல் திருகுலத்தில் வடஆற்காடு மாவட்ட வேலூரில் (மெய்யான இந்துமத ஆண்டு அமுத ஆண்டு 43,73,087இல்) அருட்போர் அறிவித்துள்ளார். ஏற்கனவே திருத்தணி முருகன் (1982ஆம் ஆண்டு சனவரி 7ஆம் நாள் மார்கழித் திங்கள் 23ஆம் நாள்) மயில் மீது தேவியர் இருவரோடு அமர்ந்து அருட்படைத் தளபதியாக இருந்து இந்த அருட்போரை நடத்தி முழுவெற்றியாக்கித் தருவதாக வாக்களித்திருக்கிறார். அதாவது திருத்தணி முருகன் இந்த அருட்போருக்கே தலைவராக இருந்து அருட்போருக்குப் பின் இந்த அருளாட்சிக்குப் பாதுகாவலராக இருப்பார். ஏனென்றால், அப்பொழுதுதான் அருட்போரின் வெற்றிப் பயன்கள் நீடித்து நிலைத்துக் காத்திடப்படும். மேலும் அருளாட்சியின் செயல்திட்டங்கள் அனைத்தும் முழுவெற்றி பெற்றிடும். அதாவது, தமிழக மக்களின் தலைமையில் உலக மக்கள் அனைவரும் அருளாட்சியின் பயனை அடைந்திடுவார்கள்.

மேலும் இந்த அருட்போர் 1992இல்தான் அறிவிக்கப்படுவதாக இருந்தது. ஆனால், துவாபர யுகத்தில் பாரதப் போரின் குருகுல ஆச்சாரியாரான துரோணச்சரியார் கழுத்தில் காயம்பட்ட நிலையில் விண்வெளியிலிருந்து மண்ணுலகு வந்து அருட்படைக்குத் தளபதியாகவும், தன்னுடைய மகனை இமயமலைமடி வாழ்

இறவாயாக்கைப் பெரியோனான அசுவத்தாமனை இணைத் தளபதியாகவும் அமர்த்திக் கொண்டிட்ட காரணத்தால்தான் நமது குருதேவர் அரசயோகி அருளாட்சி நாயகம் 1992இல் அறிவிக்க வேண்டிய அருட்போர் அறிவிப்பை 18.10.1986இல் அறிவித்தார். அதற்குரிய நிறைவுப் பூசையை 18.10.1986இல் பாலாற்றங்கரைக் காட்டுவாடிச் சுடலையில் பிணங்கள் எரிய, சுடலைக்குரிய ஈசுவர ஈசுவரிகள், திரிசூல திரிசூலிகள், கபாலிக கபாலிகிகள், இடாக இடாகினிகள், இயக்க இயக்கிகள், மோக மோகினிகள், ஆண்டி ஆண்டிச்சிகள், ..... எனப்படும் அனைவரும் ஆனந்தக் கூத்தாட 36 மானுடர்கள் தன்னைச் சுற்றி வந்து வணங்கச் செய்து முடித்தார். அதாவது நிறைவுப் பூசையை முழுமையாகச் செய்து முடித்தார்.

(11) இப்படி 18.10.1986இல் குவலய குருபீடம், நிறையக்ஞர், கருவறை மூலவர்களின் அம்மையப்பர், அருளாட்சி நாயகம், நமது குருதேவர் முருகக் கடவுளையும், தேவி தெய்வானை நாச்சியாரையும், தேவி வள்ளி நாச்சியாரையும், ஆச்சாரிய பீடமான துரோணாச்சாரியாரையும், அசுவத்தாமனையும் முன்னிறுத்தி அறிவித்த அருட்போர்; இனி எப்பொழுது? எப்படி? எவரால்? எங்கு? எந்த வடிவில்?... தோற்றுவிக்கப்படும் என்பது பற்றி எதுவும் கூற விரும்பவில்லை நமது குருதேவர். ஆனால், அண்டபேரண்டமாளும் பதினெண் சித்தர்களின் நேரடி வாரிசாக வந்துள்ள நமது குருதேவர் 18.10.1986 சனிக்கிழமை, அதாவது அருளாட்சிப் போர் அறிவித்த அன்றைக்கே பாலாற்றங்கரைச் சுடுகாட்டில் அருட்போர் அறிவிப்பு நிறைவு விழாவில் 36 மானுடர்களை (ஆண், பெண் இருபாலாரும் கலந்திருந்தனர்) முழுமையாக நேரடியாகப் பங்கேற்கச் செய்தார். இதில் எத்தனை பேர் அருளாட்சி வரை குருதேவருக்குத் துணையாக இருப்பார்களோ, இருக்க மாட்டார்களோ தெரியாது!

நாம் எதிரிகளைப் பார்த்து பயப்படுவதில்லை. அவர்களைப் பற்றிச் சிந்திப்பது கூட இல்லை. ஏனென்றால், எத்தகைய எதிரியையும் எந்த நேரத்திலும் சந்திக்கவும், சமாளிக்கவும் நமது குருதேவருக்குத் துணிவும், தெளிவும், வலிவும், துணையும், விண்ணுலகப் படையும், மண்ணுலகப் படையும் இருக்கின்றன. ஆனால், நம்மவர்களாகத் தோன்றி நம்மிடையே நல்லவர்கள் போல் வாழும் நயவஞ்சகர்கள், பேராசைக்காரர்கள், பதவி வெறியர்கள், கருங்காலிகள், கங்காணிகள், கைக்கூலிகள், இனத் துரோகிகள், மொழித் துரோகிகள், சுயநலக்கார ஊசலாட்டக் காரர்கள், தமிழகத்துக்கே உரிய கோழைச் சந்தர்ப்பவாதிகள், ... என்று வகைவகையாக இனம் பிரித்து பட்டியலிட்டுக் காட்டப்படக் கூடிய நமது உட்பகைவர்களைச் சந்திப்பதும் சமாளிப்பதும்தான் நமது குருதேவருக்கு அரிது, பெரிது.

எனவே, நாம்தான் ஒற்றுமையோடும், நட்புமிகு கட்டுப்பாட்டோடும், பாசமிகு தோழமையோடும் ஒருங்கிணைந்து செயல்பட்டு நம்மிடையே தோன்றக் கூடிய தீய சக்திகள் அனைத்தையும் முறியடிக்க வேண்டும். அதற்குரிய ஒரே வழி **மீண்டும் ஒரு பாரதப் போர்** என்ற தலைப்பிட்ட இந்த 23 பக்க அஞ்சல் வடிவக் கட்டுரையை நம்மவர்கள் அனைவரும் பலமுறை படித்துப் படித்துப் பார்க்க வேண்டும். நம்மவர்கள் அனைவரும் கட்டுப்பாடாக அருட்போர் தொடங்கி முடியும் வரை இந்தக் கட்டுரையை அன்றாடம் ஒருமுறை படிக்க வேண்டும்; படித்துக் காட்ட வேண்டும். நம்மவர்கள் விரைந்து இந்த "மீண்டும் ஒரு பாரதப் போர்" என்ற கட்டுரைக்கு பேனா நகல்களும், கார்பன் நகல்களும் எடுத்து நாடெங்கும் அனுப்ப வேண்டும். நம்மவர்களின் இடைவிடாத முயற்சியால் மிகக் குறுகிய காலத்திற்குள் "மீண்டும் ஒரு பாரதப் போர்" என்ற கட்டுரையின் நகல் நம்மவர்கள் அனைவரின் கோப்புக்களில் இடம் பெறுமாறு செய்ய வேண்டும். இவற்றிற்கெல்லாம் மேலாக இந்தக் கட்டுரையை நமது ஆர்வலர்களும், ஆதரவாளர்களும், ஏந்தாளர்களும்,

விருப்பாளர்களும், நம்பிக்கையாளர்களும், போற்றுளர்களும், ... விரைவில் எளிதில் படித்தறியும் வண்ணம் நூல் வடிவில் அச்சிட்டு குறைந்த விலையில் வழங்கியேயாக வேண்டும்.

(12) இந்த வேண்டுகோளுடன் இந்த **'மீண்டும் ஒரு பாரதப் போர்'** என்ற அஞ்சல் வடிவக் கட்டுரையை நிறைவு செய்ய விரும்புகிறேன். வடஆற்காடு மாவட்டம் வேலூர் திருகுலத்தில் 17, 18.10.1986இல் நிகழ்ந்த இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சிகளில் பங்குபெற்ற அனைவரும் ஒன்றுகூடி கலந்துரையாடித்தான் இந்த அஞ்சல் வடிவக் கட்டுரை எழுதப்படுகிறது. எனவே, ஞாபகக் குறைவாலும், ஒருசில அருளுலகச் சட்டதிட்டக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டும்தான் சில செய்திகளும், சில நிகழ்ச்சிகளும், சில கருத்துக்களும் விடப்பட்டிருக்கின்றன. எனவே, இதிலுள்ள அனைத்துச் செய்திகளும், நிகழ்ச்சிகளும், கருத்துக்களும் மெய்யானவைதான், சரியானவைதான். இவை குருதேவருக்குப் படித்துக் காட்டப்பட்டு குருதேவரின் வாழ்த்தும், முழு ஒப்புதலும் பெறப்பட்டவையே. இந்தக் கட்டுரையின் அவசியமும், சிறப்பும், முதன்மையும் கருதி, அண்டபேரண்டத்திலிருந்து வந்திருக்கும் தேவதேவியின் வாழ்த்தும் ஒப்புதலும் பெற்றே இக்கட்டுரை அனுப்பப்படுகிறது.

உரும வேளை (உச்சி வேளை) பகல் 1.35 மணிக்கு 1.4.1987இல் குருதேவரால் திருவோலக்கத்திலும், நாளோலக்கத்திலும் ஏற்கப்பட்டது.

**//உண்மை நகல்//**

**//இதன் மூல நகல்: கடந்தப்பட்டி சித்தரடியான் ஒருவரின் கையெழுத்தில் எழுதப்பட்ட கையெழுத்துப் பிறதி நகல். இது சற்றே நைந்திருந்ததால், சித்தர் மாநகரிலிருந்த கோப்புக்களில் கிடைத்த நல்ல நகலைக் கொண்டு நேர் செய்யப்பட்டது. இந்த நல்ல நகல் சித்தரடியான் திரு M.C.இராமன் அவர்களின் கையெழுத்தில் இருந்திட்டது.//**

# குருதேவரின் ஆணையுரை

எமது நூறாயிரக்கணக்கான கட்டுரைகளும், நூற்றுக்கணக்கான நூல்களும் கையெழுத்துப் பிறதிகளாக உலவியே உலகெங்கும் “அருளாளர்களை” [Divinators, Mystics, Sages and Saints] உருவாக்கியிருக்கின்றன என்கின்ற நிலையில், அவற்றில் சிலவாவது அச்சேறிய நூல்களாக [Printed Books] உலவ ஆரம்பித்திட்டால்;

‘மண்ணில் விண்ணைக் காணலாம்’,

‘மறைவாக உள்ள இறைமைக் கொள்கை யெல்லாம் மக்களின் அன்றாட வாழ்வில் பயனுற நிறைந்திடும்’,

‘விண்ணகத்துப் பேருண்மைகளைக் கண்ணகத்து காணலாம்’,

‘இனிய புனிதங்களைப் புவியோர் புரிந்து தனக்குள் கனியப் பெறலாம்’,

‘பிறவிப் பெருங்கடலை நீந்தலாம்’,

‘அருவ உருவ அருவுருவ சித்திகளைப் பெறலாம்’,

‘வாழ்வியல் துன்பங்களை இன்பங்களாக்கிக் கொள்ளலாம்’,

‘அச்சம், கூச்சம், இச்சை வென்றுயரலாம்’,

‘ஆச்சரிய மாச்சரியங்களைப் புரிந்து அகற்றலாம்’,

‘வருவன ஏற்று எதற்கும் வருந்தாதிருந்து வாழ்வு பெறலாம்’,

‘பிறர் துயர் துடைக்கும் தூய வாய்மை வாழ்வு அடையலாம்’,

‘சாகாக்கல்வி, வேகாத்தழை, போகாப்புனல் எனும் மூன்றும் உய்த்துத் துய்த்து உய்யலாம்’,

‘அகில உலக ஆன்ம நேய ஒருமைப்பாடு உருவாக்கலாம்’,

‘உலகச் சமத்துவச் சகோதரத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் தோன்றலாம்’,

‘ஆவிகள் உய்யலாம்’, ‘ஆன்மாக்கள் மெய் பெறலாம்’,

அத்துணையும் அத்தனல் ஆத்தாவால் நிகழும் எனத் தூய மறைமுதல் இறைவர் மேல் ஆணையிட்டுரைக்கிறோம்.

**// ‘கருவூரார்கள்’ என்ற தலைப்பிட்ட கட்டுரையில் குருதேவர் வழங்கிய வாசகங்கள். //**

"இந்துக்கள் கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்."

\- குருபாரம்பரிய வாசகம்.



தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறார் அவர்கள் (கி.பி.785 - 1040).

இவருக்கு அடுத்து சுமார் 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்** அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.



அம்மையப்பர்

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam Trust,** (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org https://gurudevar.org
https://induism.org https://books.gurudevar.org
Email: indhuism@gmail.com